வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். CC.305/**2021**

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | பாஸ்கர் | : | ஜாதி | |
| தந்தை பெயர் | உத்திராஜ் | : | தொழில் | கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளர் |
| கிராமம் | கருப்பூர் | : | சமயம் | |
| தாலுக்கா | | : | வயது | 50/2023 |

(எதிரி ஆஜர் )

**நாள் : 19.06.2023**

**முதல் விசாரணை:**

நான் கருப்பூர் கிராமத்தில் குடியிருந்து கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 03.02.2021 அன்று எங்கள் கிராம நிர்வாக அதிகாரி அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கொட்டகை கட்டி உள்ளவர்களை அகற்றும்படி கூறினார், ஆஜர் எதிரியிடமும் இந்த தகவலை கூறினார். அதன் பிறகு 05.02.2021- அன்று மதியம் 2.30 மணியளவில் என்னை எங்கள் கிராம அலுவலர் அந்த கிராமத்திற்கு சென்று ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டார்களா என்று பார்த்துவர சொன்னார். நான் சென்று பார்த்தபோது இருவர் கொட்டகை போட்டுக்கொண்டு இருந்தார்கள். நான் அவர்களை அகற்றும்படி சொன்னதற்கு அவர்கள் அகற்ற முடியாது என்றும் ஆஜர் எதிரி வந்தால்தான் கொட்டகை போடுவதை நிறுத்துவோம் என்று கூறினார்கள். நாங்கள் பேசிகொண்டு இருந்தபோதே ஆஜர் எதிரி அங்கு வந்துவிட்டார். அவரிடம் நான் கொட்டகையை அகற்றும்படி கூறியதற்கு அவர் என்னை பார்த்து நீ யார் அதை சொல்வதற்கு என்று கூறி என்னை தகாத வார்த்தையால் திட்டினார். எங்கள் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே ஆஜர் எதிரி என்னை கொட்டகை கட்டும் கயிற்றை எடுத்து என் கைகளை கட்டி கொட்டகைபோட வைத்திருந்த மரத்தில் என்னை கட்டி வைத்துவிட்டார். அதன் பிறகு என்னை கையால் முதுகில் அடித்துவிட்டார். நான் என் கையில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டு எங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவித்துவிட்டு அதன் பிறகு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். அதன் பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை என்னுடைய கிராம நிர்வாக அலுவலர் எழுதினார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1/அ.சா.1 ஆகும்**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை : இல்லை

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**
**நீதித்துறை நடுவர், திருவையாறு )**